செ.கு.எண்: 95 நாள்: 16/04/2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 16.4.2013

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S.G. லியாகத் உசேன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 4.4.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியைய்யும்;

கடலூர் மாவட்டம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் தலைமை காவலராகப் பணி புரிந்து வந்த திரு B. பழமலைநாதன் அவர்கள் 5.4.2013 அன்று திண்டுக்கல் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை நகர குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R. சேகர் அவர்கள் 8.4.2013 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S. துரைசாமி அவர்கள் 20.3.2013 அன்று அய்யம்பாளையம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 11.4.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் லியாகத் உசேன்; சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர்; தலைமைக் காவலர்கள் பழமலைநாதன் மற்றும் துரைசாமி

ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக்குறைவால் காலமான காவல் துறை உதவி ஆய்வாளர் லியாகத் உசேன்; மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர் மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்த தலைமை காவலர்கள் பழமலைநாதன் மற்றும் துரைசாமி ஆகியோர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9